# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර



அனைத்து வகையான
அச்சுவேலைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்:

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி
மட்டக்களப்பு.

தொலைபேசி
065-24821



ஒளி - 01 - கதிர் - 223 28-11-2000 செவ்வாய்க்கிழமை பக்கங்கள் - 06 விலை - ரூபா 5/



# தமிழர்களுக்கு நீதிவழங்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது சந்தேகமே

## சமாதான தீர்வுக்கு நாம் முட்டுக்கட்டை போடவில்லை
## அடக்கு முறை தொடருமானால் பிரிந்து செல்வதே ஒரே வழி

### மாவீரர் தின உரையில் பிரபாகரன்

(அரியம்)

**இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பரஸ்பர பகையுடனும் சந்தேகத்துடனும் ஒரு கொடிய போரில் ஈடுபட்டு வரும் இரு தரப்பினரும் சண்டையைத் தொடர்ந்தபடி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறை சாத்தியமானது அல்ல. இதனால் தான் போர் நெருக்கடியை படிப்படியாகத்தளர்த்தி போர் ஓய்ந்து சமாதான சூழ்நிலையில் நல்லெண்ண புற நிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகின்றோம் என தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று மாலை ஆற்றிய மாவீரர் தின உரையில் தெரிவித்தார்.**




அவர் தொடர்ந்து பேசுகையில் சமாதானப் பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனை எதனையும் என்பது விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ணப் புற நிலையும், இயல்பு நிலையும் உருவாக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை என்றுமே நாம் வலியுறுத்தி வருகின்றோம். இயல்பு நிலை என்னும் போது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதார சுமைகள், தடைகள் நீங்கி எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்பு நிலைக்கு திரும்ப வேண்டும் என்பதையே நாம் கருதுகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

### நாம் நிபந்தனை விதிக்கவில்லை

ஒரு உறுதியான தளத்தில் உகந்த புறநிலையில் நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழும் போதுதான் அவை ஆக்கபூர்வமானதாக அமையும். ஆகவேதான் பேச்சுக்கான நல்லெண்ண புற நிலையின் அவசியத்தையும் தேவையையும் வலியுறுத்தினோமே தவிர பேச்சுக்கு நாம் நிபந்தனையை விதிக்கவில்லை.

போர் நெருக்கடி தளர்ந்து இயல்பு நிலை தோன்றுவதற்கு இருதரப்பிலிருந்தும் நம்பிக்கை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன் எடுக்கப்பட வேண்டுமென நோர்வே அரசு சில யோசனைகளை தெரிவித்திருக்கின்றது. இதனை நாம் ஆழமாக பரிசீலனை செய்து வருகின்றோம்.

எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச்சுமை குறைந்து பரஸ்பர நல்லெண்ணம் நிலவவும் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் வரவேற்கின்றோம். அதற்கான முன் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்.

### புதிதான விடயமல்ல

சமாதானப் பேச்சுவார்த்தை தமிழ் மக்களுக்கு ஒரு புதிதான விடயமல்ல தமிழ் மக்கள் சார்பில் எமது விடுதலை இயக்கமும் எமக்கு முந்திய தலைமைமைகளும் சிங்கள அரசுடன் எத்தனையோ தடவைகள் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். பண்டா செல்வா ஒப்பந்த காலத்திலிருந்தே பல தசாப்தங்களாக பல வரலாற்றுச் சூழல்களில் பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயினும் இப்பேச்சுவார்த்தைகள் தமிழ் சொந்த மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க தவறிவிட்டன.

இதனால் தமிழரின் பிரச்சினை மேலும் மேலும் சிக்கலடைந்து பெரும் போராக விஸ்பரூபம் பெற்றிருக்கின்றது. இந்த துரதிஸ்ட நிலைமைக்கு பிரதான காரணம் தமிழரது பிரச்சினைகளின் அடிப்படைகளை தமிழர்களது அரசியல் அபிலாசைகளை சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள மறுப்பது தான்.

### சிங்கள தேசம் புரிந்து கொள்ள வேண்டும்

தமிழரின் பிரச்சினைக்கு



சமாதான வழியில் நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமாயின் தமிழர் பற்றிய சில அடிப்படை உண்மைகளை சிங்கள தேசம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். அத்தோடு தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை விரும்புகின்றார்கள் என்பதையும் அவர்களது அடிப்படை அபிலாசைகள் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தனித்துவமான இன அடையாளத்தை கொண்டவர்கள். ஒரு தேசிய இனக்கட்டமைப்போடு அந்த இனத்துவப் பெருமையோடு வாழும் ஒரு மக்கள் சமூகம் அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயக மண் நிலம் உண்டு. எமது மக்கள் விரும்புவது எல்லாம் ஒன்று தான். எமது சொந்த மண்ணில் நிம்மதியாக வாழ வேண்டும் என்பது தான். மற்றவர்களின் அதிகார ஆதிக்கமோ நெருக்குவார்களோ இல்லாத ஒரு அரசியல் சூழலில் தம்மைத்தாமே ஆட்சி புரிந்து கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எமது மக்களின் ஆழமான அபிலாசைகள் ஆகும். சிங்கள மக்கள் இதனை புரிந்து கொள்ள இதனை சமாதான வழியில் வேண்டும். இந்த புரிந்துணர்வின் அத்திவாரத்தில் இருந்து தான் நியாமான நிரந்தரமான தீர்வைக் கட்டியெழுப்புவது முக்கியமாகும்.

### சந்திரிகா முன்வருவாரா?

தமிழர் பிரச்சினைகளின் அடிப்படைகளை உணர்ந்து சமாதான வழியில் தமிழர்களுக்கு நீதி வழங்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது எமக்கு சந்தேகமே. தமிழர்களுக்கு எதிராக தென்னிலங்கையில் குமுறும் இனக்குரோத வெறியாட்டங்கள், ஆட்சி அதிகாரத்தில் பேரினவாத சக்திகளின் மேலாண்மை, தொடர்ச்சியாக இராணுவ மயப்படுத்தப்படும் சிங்கள சமூகம், மகா சகத்தினரின் தமிழ் விரோதப் போக்கு அரசாங்கத்தின் இராணுவத் தீர்வுக்கொள்கை இவற்றையெல்லாம் பார்க்கும் போது தமிழரின் தேசிய பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்படுமா என்பது கேள்விக்குறியாகின்றது. அத்தோடு சந்திரிகா அரசு மேற்கொள்ளும் சிலகுருட்டுத்தனமான அணுகு முறைகளும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக அமைந்து விடுகின்றது.

பெருமாளுக்கு முதலமைச்சராக முடிசூட்டி முந்திய இந்திய அரசு இழைத்த வரலாற்று தவறு போல சந்திரிகா அரசும் தமிழ் விரோத குழுவொன்று வடக்கு கிழக்கில் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தியிருக்கின்றது. இப்படியான நடவடிக்கைகள் மூலம் இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்வதுடன் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விடுகின்றது.

### நாம் முட்டுக்கட்டை போட வில்லை

எனது அன்பான மக்களே எமது தேசிய பிரச்சினை இப்போது உலக நாடுகளின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்து வருகின்றது.

தீர்க்க வேண்டுமென சர்வதேச சமூகம் விரும்புகின்றது. உலக மனச்சாட்சியின் பார்வை எமது பக்கம் திரும்பி இருப்பது நல்லதொரு அறிகுறியாகவே தெரிகிறது நாம் சமாதானப் பேச்சிலோ அல்லது சமாதான வழியிலான அரசியல் தீர்வுக்கோ முட்டுக்கட்டை போடவில்லை என்பதை உலகுக்கு உணர்த்தி வருகின்றோம்.

சமாதானப் பேச்சுக்கு உகந்ததாக சமாதானச் சூழலை ஏற்படுத்தவேண்டுமென்ற எமது நிலைப்பாட்டையும், தமிழர்களினது அடிப்படைக் கோரிக்கைகளையும் உலக சமூகம் புரிந்து வருகின்றது. தமிழருக்கெதிரான ஒடுக்குமுறையின் பின்னணியில் உள்ள சக்திகள் யார் என்பதையும் உலகம் இனங்கண்டு வருகின்றது. உலகநாடுகளில் இருந்து பெறப்படும் நிதியுதவிகளையும் ஆயுத உதவியையும்

5ம் பக்கம் பார்க்க

## வாசக நெஞ்சங்களுக்கு

**கிழக்கு மாகாணத்தின் முதல் தினசரியும் ஒரே தினசரியுமாக வெளிவந்து வாசகர்களாகிய உங்களது பூரண ஆதரவினால் "தினக்கதிர்" இன்று வெற்றிநடை போட்டு வருகின்றது.**

**எத்தனையோ இடர்பாடுகள் மற்றும் வள, ஆளணி, பொருளாதாரச் சிக்கல்களுடனும் இம்மண்ணில் ஒரு பத்திரிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதற்காய் நாம் இரவு பகல் பாராது எமது சக்திக்குமதிகமாய் உழைத்து வருகிறோம்.**

**இத்தனைக்குமப்பால் அண்மையில் எமது அச்சியந்திரத் திலேற்பட்ட கோளாறு காரணமாக தினக்கதிரின் வெளியீடு இடையிடையே தடைப்பட்டு விட்டது.**

**"தினக்கதிரை" இடையூறின்றித் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்பதற்காக நாம் பல வழிகளிலும் முயன்றோம்.**

**எனினும் அச்சு வசதியுள்ள வர்களின் பூரண ஒத்துழைப்பின்மையால் அது கைகூடவில்லை.**

**இருந்தும் இன்றைய பத்திரிகையின் முக்கியத்துவமறிந்து இந்த வடிவிலேனும் தினக்கதிரை உங்கள் கரம் சேர்த்துள்ளோம்.**

**தற்சமயம் எமது இயந்திர த்திலேற்பட்டுள்ள கோளாறு சீர்செய்யப்பட்டு வருவதால் இன்னும் ஓரிரு தினங்களில் தின்க்கதிர் வழமைபோல் தினமும் உங்கள் கரம் சேரும்.**

**அதுவரையில் எமது வாசகர்கள் காத்திருந்து தொடர்ந்தும் தமது பூரண ஆதரவை தினக்கதிருக்கு வழங்கவேண்டுமென வேண்டிக் கொள்கிறோம்.**

**-ஆசிரியர்-**

### படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில்
## மாவீரர் தின நிகழ்வுகள்

மாவீரர் தினமான நேற்று படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் பலத்த பாதுகாப்புக்கு நடவடிக்கைக்கு மத்தியில் சில நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன,

வவுனியா பூந்தோட்ட கல்வியியல் கல்லூரியில் கொடிக்கம்பத்தில் புலிக்கொடி பறந்தது. இரவோடு இரவாக புலிக் கொடி கம்பத்தில் இனம் தெரியாதோரால் பறக்கவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்லூரிப் பீடாதிபதி சே.அழகரத்தினம் பொலிசாருக்கு முறையிட்டார்.

அதனை தொடர்ந்து அங்கு விரைந்த பொலிசாரும் படையினரும் முற்பகல் 11 மணியளவில் கொடியை கழற்றி எடுத்தனர்.

இந்த கொடிப்பரபரப்பினை அடுத்து முதலாம் ஆண்டு மாணவர்களில் 60 சிங்கள மாணவர்கள் வகுப்புக்களை புறக்கணித்து தமது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு வலியுறுத்தி நின்றனர்.

### வக்கனை வண்ணக்கர்

ஜனாதிபதி உத்தியோக பூர்விஜயத்தை மேற்கொண்டு லண்டன் பயணம்- செய்தி



போன வருஷம் மாவீரர் தினத்துக்குள்ளேயும் அம்மா வெளியிலதான். இந்த வருசமும் வெளியிலதான் அப்படியெண்டா இதுக்குள்ள ஒரு ரகசியம் இருக்கு பாருங்கோ. அம்மாவுக்கு வெளிநாடுதான் சேப்டி

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## ஊரெல்லாம் கூடி இழுக்க வேண்டிய தேர்

கிழக்கு மாகாணத்துக்கென ஒரு தினசரி பத்திரிகை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது பலரது நீண்ட நாள் கனவாக இருந்தது.

இலங்கையில், கொழும்புக்கு வெளியே தினசரிப் பத்திரிகைகளை வெளியிடுவதில் ஆரம்பத்தில் வெற்றி கண்டது வடக்கு மாகாணமாகும்.

யாழ்ப்பாணத்தில் ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, உதயன், ஈழநாதம் என ஐந்து தினசரிப் பத்திரிகைகள் வெளியாகி வெற்றி நடை போட்டன.

இவற்றுள் ஈழநாதமும், உதயனும் இன்னும் வன்னி மற்றும் யாழ்ப்பாணம் பிரதேசங்களில் தொடர்ந்து வெளிவருகின்றன.

ஈழநாடு ஒரு சஞ்சிகையாக தொடர்ந்தும் வன்னிப்பகுதியில் வெளியாகி வருகின்றது.

ஈழமுரசு பத்திரிகையே பின்னாளில் ஈழநாதமாக பரிண மித்தது.

முரசொலி பத்திரிகையும் வாரவெளியீடாக வெளிவந்த 'திசை'யும் பின்னர் பல்வேறு காரணங்களால் தடைப்பட்டுப்போயின.

இவை தவிரவும் பல்வேறு வார, மாத இதழ்கள் வடமா காணத்தில் பல்வேறு கால கட்டங்களயில் வெளியாகிச் சாதனை படைத்தன.

இவற்றையெல்லாம் நான் இங்கு குறிப்பிடக் காரணம், இலங்கை என்ற தீவுக்குள் தனித்த அடையாளங்களுடன், தனது உரிமைகளுக்காக ப் போராடுபவர்கள் என்ற வகையில் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மத்தியில் பத்திரிகைகளின் செயல்பாடு எவ்வளவு தூரம் முக்கியத்துவமானது என்பதை விளக்கவே.

இலங்கைத் தீவு என்பதற்கு அப்பால் வடக்கு கிழக்கு மக்களின் தேவைகள் வேறானவை. அவை சிக்கல் வாய்ந்தவையும் கூட

இவற்றை வெளிப்படுத்தவும், வடக்கு கிழக்கு வாழ் மக்களிடையே அ வர்களது பிரச்சனைகள் அன்றாடத் தேவைகள் பற்றிய தொடர் பாடல்களை அவர்களிடையே ஏற்படுத்தவும்,

இவற்றுக்கு அவற்றை வடக்குக் கிழக்குக்கு அப்பால் தெரியப்படுத்தவும் எமது மாகாணங்களுக்கென தனித்த பத்திரிகைகள் அவசியமானவை.

இந்த வகையில் வடக்கு மாகாணத்தில் வெளிவந்த, வெளிவந்துகொண்டிருக்கும் பத்திரிகைகள் அப்பகுதி மக்களிடையே ஆறறிய பணிகள் பல் வகைகளிலும் மிகவும் முக்கியமானவை.

ஆனால், நீண்டகாலமாகவே கிழக்கு மாகாணம் இத்தகைய சொந்த தொடர்பூடகங்கள் எவையும் இல்லாத நிலையில், த்னிமைப்பபடுத்தப்பட்டு இருந்தது.

கிழக்கு மாகாண மக்களின் தனித்துவமான பிரச்சினைகள் அவர்களது தேவைகள் உரிமைப்பபோராட்டத்தில் அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் என்பவை தொடர்பில் எந்தவித விளக்கங்களையும் பெற முடியாத நிலையில் கிழக்கு மாகாணம் இருந்து வந்தது.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் முன்னர் விடிவானம் என்ற வாரமலரும் தொடர்ந்து தினக்கதிர் வாரமலரும் வெளியிடப்பட்டு சில காலம் இம்மாகணத்துக்குரிய பணிகளை ஆற்ற முயன்றது,

பல காரணங்களால் இவை இடையில் தடைப்பட்டுப்போக, மீண்டும் 14-04-2000 முதல் "தினக்கதிர்" தினசரிப் பத்திரிகையாக வெளிவந்து கிழக்கு மாகாண மக்களிடையே மட்டுமன்றி யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் என வடக்கு மாகாணங்களிலும் தனது "கதிரை" விரித்து மக்களின் ஆதரவையும் பெற்றுவருகிறது.

எத்தனையோ ஆளணி, தொழில்நுட்ப, பொருளாதாரப் பற்றாக்குறைகளுடன், வியாபார நோக்குடனன்றி கிழக்கு மாகாணத்தில் அவசியத் தேவைக்காகவே தினக்கதிர் தினசரி வெளியிடப்பட்டு வருகிறது.

ஆரம்பகாலத்தில் சிறிது "தளர்" நடை போட்டபோதும் கடந்த மூன்று மாதத்துக்கு மேலாக தினக்கதிர் வாசகர்களாகிய உங்களது பூரண ஆதரவுடன் வெற்றி நடை போட்டு வருகிறது.

இடையில் எமது சக்திக்கு அப்பாற்பட்டு எமக்கு ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகளால் தினக்கதிர் இடையிடையே தடைப்படுகிறான்.

இப்பத்திரிகையின் கிழக்கு மாகாண முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாது. தொழில் நுட்ப வசதிகளுள்ள சிலரும் எமக்கு உதவாது கைவிரித்து விட்டனர்.

ஆனாலும் தினக்கதிர் தளராது தனக்கிருக்கும் பொருளாதார பலவீனங்களையும் எதிர்கொண்டு தொடர்ந்து வெளிவரும்.

அதன் தொடர்ச்சியான வெளியீட்டுக்கும், வளர்ச்சிக்கும் வாசகர்களாகிய உங்களது ஒருமித்த பங்களிப்பு மிகவும் அவசியம்.

இது ஊரெல்லாம் கூடி இழுக்க வேண்டிய தேர் வாருங்கள் நீங்களும் ஒரு கை தாருங்கள்.

# மையங் கொண்ட வரலாற்றுப் புயல்கள்

சுதந்திரம்,தாயகம்,விடுதலை .... இத்தகைய சொற்கள் மானுட வாழ்வின் மிக உன்னத நிலைகளை, தேவைகளை எடுத்தியம்புவன ஒரு மனிதன் எவ்வளவு பண வசதி படைத்தவனாயினும் கல்வி கேள்வி களிற் சிறந்தவனாயினும் மேற்குறித்த மூன்று சொற்களையும் அனுபவிக்க இயலாதவன் ஆயின் அவன் 'இருந் தும்' இறந்தவனே; அவ்வளவுக்கு மேற்குறித்த மூன்று பதங்களும் வாழ்வை அர்த்தமுடையதாக்கு கின்றன: வாழ்வை உயிரோட்டம் மிக்கதாகின்றன.

*'ஆழ் கிணற்றுக்கள் அடங்கிவாழும் தவளையை விட-*

*தீப்பிளம்போடு போராடி மடியும் 'விட்டிலே சிறந்ததல்லவா?'*

எனும்வினா எழுப்பும் கலீல் ஜிப்ரான் என்ற லெபனான் தேசத்துக் கவிஞனின் மேற்போந்த கருத்தை வலிதாக்குகின்றன.

'வரலாறு என்பது மனித விடுதலையை நோக்கி நகரும் ஒரு பேரியக்கம். சுதந்திரப் போராட்டங்களே இந்த வரலாற்றப் பேரியக் கத்தின் சக்கரங்களை சுழற்று கின்றன. எந்த ஒரு தேசம், எந்த ஒரு மக்கள் சமூகம் சுதந்திரம் வேண்டி போராடுகின்றதோ அங்கு தான் வரலாற்றுப் புயல் மையம் கொள்கிறது' என்ற மாபெரும் செய்தியாக வெளியான வரலாற்றுக் குரல் உலக வரலாற்று யதார்த் தத்தை திறம் பட எடுத்தியம்புகிறது.

கியூபா,இஸ்ரேல், நிக்கரகுவா, தென்னாபிரிக்கா, நமீபியா,வியட்நாம், எரித்திரியா..என பல நாடுகள் அநீதியான ஆக்கிரமிப்புக்களை அட்டூளியங்கள் செய்த ஆட்சிகளை மக்கள் மயப்படுத்திய விடுதலைப் போராட்டங்கள் மூலம் வெற்றிகரமாக அடித்து துரத்தி 'தம்மைத்தாமே ஆள விதி செய்து வரலாற்று முன் உதாரணங்களாகத் திகழ்கின்றன.

'பாடிஸ்டா' என்ற அமெரிக்க அடிவருடியான சர்வதிகாரியை 'யூலை-26' என்ற விடுதலை அமைப்பு மூலமான போரில் வென்று இன்று வரை அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பெரும் சவலாக உள்ள கியூபா இவற்றில் முக்கியமானது. 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' என்று நீதிமன்றில் முழங்கிய ஃபிடல் கஸ்ரோவுடன் மக்கள் அனை வரும் ஒரே தலைமையை ஏற்று வீறுடன் போர் நடத்தியதாலேயே குறுகிய

கத்தின் சக்கரங்களை சுழற்று கின்றன. எந்த ஒரு தேசம், எந்த முற்பகுதியில் 'பிக்ஸ் விரிகுடா' பரப்பில் அமெரிக்க கைக்கூலிகளின் உதவியுடன் 'ஜோன் எப் கென்னடியின் அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்ட ஒப்பரசேன் பே ஒப்பிக்ஸ்' நடவடிக்கை தேசப்பற்ற மிக்க கியூபா புரட்சிக்காரர்களால் தொடக்கத்திலேயே முறியடிக் கப்பட்டமை முதன்மையானது. இன்று கல்வி சுகாதாரம் விளை யாட்டுத் துறைகளிலும் கியூபா பிரகாசிக்க கியூபா விடுதலைப் போரில் ஒட்டு மொத்த மக்கள் பங்களிப்பும் புலமையாளர்களின் ஒருமித்த பங்கெடுப்புமே காரண மாக காட்டப்படுகின்றன.

அவ்வாறே 'எனது மக்களைப் போக விடு' (let my people go ) என்று முன்னைய வரலாற்றில் ஒலித்தவாறு நாடின்றி 'குந்த ஒரு குடி நிலந்தானுமின்றி' அலைந்த யூத மக்களுக்கு 'ஸியோனிஸம் '(Zionism) மூலம் இஸ்ரேல் என்ற தேசம் உருவாக அம்மக்கள் மிகப் பெரியளவிலான தியாகங்களை செய்ததுடன் மக்கள் மயப்படுத்திய விடு தலைப் போரை முன்னெடுத்து மிருந்தனர்.

இஸ்ரேல் உருவாக யூத மக்கள் ஆற்றிய 'தாயகம், நோக்கிய பயணம்' (The Exodus)மிக நீண்டது.

வரலாற்றுப் புயல் மையங் கொண்ட தேசங்களில் எரித்திரியா,நிக்கரகுவா, வியட்னாம் போன்றவற்றை தவிர்த்து விட்டு நாம் நோக்க முடியாது. 'எரித்ரிய மக்கள் விடுதலை முன்னணி (E.P.L.F) முன்னெடுத்த எதியோப்பிய ஆக்கிரமிப்புக்கு எதிரான விடுதலைப்போரில் அவர்கள் தமது தளப் பிரதேசங்களை போர் தந்திரோபாயங்கள் காரணமாக பறி கொடுத்த போதும், மீளவும் அப் பிரதேசத்து மக்களைக் கொண்டே கட்டியெழுப்பப்பட்ட புதிய படைப் பிரிவுகள் மூலம் எதிரியின் பெருத்த ஆயுத இருப்பையும் மீளக் கைப்பற்றி போரின் 'இராணுவ சம நிலைமையையே மாற்றி அமைத்திருந்தமை நினைவுபடுத்தத்தக்கது. அஸ்ம ாரா நகரின் விமானத்தளம் விடுதலைப் படையிடம் முழுமையாக வீழ்ச்சி யடைந்தது. 1993 மே 24 ல் எரித்திரியாவைச் சுதந்திர தேசமாக்க முக்கிய காரணமாக நோக்கர்களால் தெரி விக்கப்பட்டிருந்தும் இங்கு குறிப் பிடப்பட வேண்டியதாகிறது.

இலத்தின் அமெரிக்க நாடான நிகரகுவாவிலும் அமரிக்க சார்பு சர்வதிகார ஆட்சியை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழுந்து 'சாண்டினிஸ்டா' என்ற விடுதலை இயக்கத் தலைமையின் கிழ் முழுமையான சுதந்திரத்தை வேண்டி போர் செய்தனர்.அங்கும் பிரித்தாளும் சூழ்ச்சியினை அமெரிக்க ஏகாதிபத்தியம் கொன்ராஸ் என்ற தனது

இஸ்ரேல் உருவாக யூத மக்கள் ஆற்றிய 'தாயகம் நோக்கிய பயணம்' (The Exodus)மிக நீண்ட்து.

களின் நடுப்பகுதியை அண்மித்து செயற் படுத்திய போதும் மக்கள் சக்தி என்ற மாபெரும் எழுச்சியின் முன் அனைத்துமே செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தன.

மேற் போந்த விடுதலைப் போராட்டங்கள் அநீதியான அடக்கு முறைக்கு எதிரான அகிமிசை தோற்றத்தால் ஆயுதப் போராட் டங்களை முன்னெடுத்து தேச விடுதலைப் போரை விரிவு படுத்த விழையும் மக்களுக்கு வரலாற்று நேர் படிப்பினைகளாகின்றன.

மறு புறத்திலே தாயக மக்களின் அபிலாசைகளை முழுமையாகப் பிரதிபலிக்காத சமாதான உடன் படிக்கைகளை சர்வதேச சமூகத்தை திருப்த்திப் படுத்தல் என்பதற்காக 'அவசரத்தில் போராட்ட அலங்கோலமாக' செய்த மாபெரும் தியாகங்களையும் அர்த்தம் இழந்தனவாக இன்றைய பாலஸ்த்தீனம் ,மற்றும் பங்களா தேஷின் சிட்டாங் கொங் மலைப் பிராந்திய சாந்தி. பாகினி இயக்கம் என்பன எதிர் மறை எடுத்துக் காட்டாக அமைந்து விடுகின்றன.

'ஒட்டுண்ணிகள் ஒரு சிலர் இருக்கக் கூடும். ஆனால் மக்கள் ஒட்டு மொத்தமாக ஒட்டுண்ணிகளாக இருக்க முடியாது. ஒரு நாட்டை; சுதந்திரத்தை , நேர்மையை ஒட்டுண்ணிகளால் பாது காக்க முடியாது. தேசாபிமானிகளாலும் புரட்சியாளர்களினாலும் தைரியமான ஆண்களாலும் பெண்களாலும் தான் காக்க முடியும் தசபிமான, புரட்சிகர மக்களை எவராலும் வெல்ல முடியாது என்ற ஃபிடல் கஸ்ட்ரோலின் கூற்று தேசத துரோகிகளை தெளிவாக விபரித்து நிற்கிறது.

வரலாற்றுப் புயலின் மையங் கொள்ளளுக்காக தாயக விடுதலை வேள்வியில் தம்மையே ஆகுதி யாக்கிய விடுதலை வீரர்களின் தியாகங்களே வரலாறு என்றும் போற்றும் மழைமேகம் துளியாகி பொழிகின்ற காலத்தில் பகை வீடு துயில்கின்ற விடிகாலை நேரத்தில் எதிரியின் பாசறையை தகர்த்தழித்து வீர சாவடையும் எம் மா வீரர்களை 'வெற்றி பெற்று தந்து விட்டு நீர் உறங்குகிறீர் விடுதலைக்கு முடிதரித்து விட்டு நீர் உறங்குகிறீர் 'என்று மக்கள் அவர்களைப் போற்றுவர்.

"தாய் நாட்டின் மடியில் ஒருவன் உயிர் விடும் போது துன்பம் முடிகிறது.சிறைச் சங்கிலிகள் தெறிகின்றன இறுதியில் அந்த மரணத்தில் வாழ்வு தொடங்குகிறது' என்ற ஃபிடல் கஸ்ரோவிக் வார்த்தைகள் காலம் எமக்களித்த கைவிளக்காண வரலாற்றின் 'மாவீரர் வாழ்வு ஒரு புனித துறவறம்' என்ற விபரிப்பின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன.

துரை-மேகநாதன்
கிழக்குப்பல்கலைக்கழகம்

# மட்டக்களப்பின் பண்பாட்டியல்

## கல்லடி, உப்போடை க. உ. வேலுப்பிள்ளை

காசுபதி நடராசா

**26. 11. 2000 அன்னாரது சிரார்த்த தினம்**

**அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

மட்டக்களப்பின் மானிடவியலைப் படித்தறியக் கூடிய மூலங்கள் பலவேறு காரணங்களாலும் அழிந்து போய்க்கொண்டிருக்கின்றன.

இவ்வேளையில் தத்தம் இனக்குழுக்களின் வரலாற்று இருப்புகளை வெளிப்படுத்த ஆய்வாளர்களும் கலைக் கழகங்களும் முன்வர வேண்டும். மட்டக்களப்பு கிழக்குப்பல்கலைக் கழகத்தின் பிரவேசம் ஒரு நல்ல சகுனம் அதன் செயற்பாடுகள் மனதுக்கு ஒரு ஆறுதலைத் தருகின்றது.

மூதாதையரின் வரலாற்றினை அவரவர் குடும்பத்தினர் இயன்றவரையில் வெளிக்கொணர உதவுவார்களாயின் அவைகளும் எமது வரலாற்று நிகழ்வுகளைத் தொகுத்துரைக்க நல்ல கருவிகளாக அமையும்.

இத்தகைய ஒரு முன்முயற்சியாக, மட்டக்களப்பு பிரதேசத்தில் கல்லடி, உப்போடையில் வாழ்ந்து மறைந்த பெரியார் க. உ. வேலுப்பிள்ளை அவர்களை நினைக்கத் தோன்றுகின்றது.

அன்னாரின் 46வது சிராத்த தினத்தை இன்று (26.11.2000) இப்பிரதேசத்தின் சமூக சேவைத் துறையில் ஆழத் தடம் பதித்த கே. ஓ. வி. குடும்பத்தினர் நினைவு கூருகின்றனர்.

இன்றும் நம்மத்தியில் வாழ்ந்து பணிபுரிந்து கொண்டிருக்கும் பெரியார் கே. ஓ. வி. கதிர்காமத்தம்பி அவர்கள் இப்பிரதேச சமூக சமயத் தொண்டர் இவரது தந்தையார் அவர்களே க. உ. வேலுப்பிள்ளை அமரர் க. உ. வேலுப்பிள்ளை அவர்களின் தந்தையாரின் பெயரும் கதிர்காமத்தம்பி உடையார். என்பதாகும். இன்று

புகழ் பெற்ற இப்பிரதேசத்தில் விளங்கும் கல்லடி உப்போடை விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயமும் உருவாகக் காரணமாயிருந்தவர்களில் இவரும் தலையானவர்.

ஐரோப்பியரின் மட்டக்களப்பு வருகை அதன் விளைவான ஆங்கிலக் கல்வி கிறிஸ்தவ, கத்தோலிக்க மதப்பரம்பல் தென்னைப் பயிர்ச்செய்கை முதலான காரணிகள் கரையோர மக்களின் இருப்பியலில் பாரிய மாற்றங்கள் படிப்படியாக உள்நுழைக்கத் தொடங்கிற்று "கொபபறா" போன்ற தென்னைப் பொருட்களின் ஏற்றுமதியினால் தென்னிந்தியா, வல்வெட்டித்துறை திருகோணமலை, மட்டக்களப்பு என கடலோர வாணிபம் விரியலாயிற்று

மட்டக்களப்பின் புறநகர்ப்பகுதியான கல்லடி உப்போடைப் பிரதேசத்தில் "கொப்பறா" வியாபாரத்துறையில் முன்னணியில் நின்றனர் கே. ஓ. வி. குடும்பத்தினர்.

வாணிபத்தால் அவர்கள் வெளிநாடுகளுடன் நல்ல தொடர்புகள் வைத்திருந்தனர்.

ஆகவே அவர்கள் தமது மக்களை ஏனைய பிரதேசத்தவர்களுக்கு இணையாக அபிவிருத்திப் பாதையில் வளர்த்தெடுக்க விரும்பினர் அந்த வழியில் தமது செல்வத்தை கோயில்தாம பணிகளுக்கும் பாடசாலைக் கல்வி பணிகளுக்கும் செலவிடத்தொடங்கினர். இப்பணி இன்றும் இவர்களின் வழித்தோன்றல்களால் முனனெடுக்கப்படுகிறது குறிப்பிட வேண்டியது.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் மட்டக்களப்பு மாணவரில் லப்பவள விழா நடைபெறும் இக்கால கட்டத்தில் அமரர் க. உ. வேலுப்பிள்ளை அவர்கள் இப்பிரதேச மக்களுடன் இணைந்து சுவாமி விபுலாநந்தரை வரவேற்று சிவானந்த வித்தியாலயம் உருவாக்க காலகோலிட்டார் என்பதை நாம் மறக்க முடியாது.

1917ல் தந்தையாரின் மரணத்துடன் அவரால் நிறுவப்பட்டு முகாமைத்துவம் செய்யப்பட்டு வந்த கல்லடி, உப்போடையின் இன்றைய விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயம் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

10.04.1925ல் கல்லடி உப்போடைக்கு வந்த சுவாமி விபுலானந்தருக்கு வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்றைய தினமே தனக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணியையும் அவரது தந்தையரான கதிர்காமத்தம்பி உடையார் சபாபதிப்பிள்ளை உடையார்( அன்னாரின் மாமனார்) ஆகியோரால் வைப்புச்செய்யப்பட்ட கல்வி அறக்கட்டளை நிதி ரூபா 5000 ஐயும் சுவாமி விபுலானந்தரிடம் வழங்கி தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் ஆங்கிலக்கல்லூரி ஒன்றை நிறுவுமாறு கேட்டுக் கொண்டார். இதுவே பிற்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனும் சிவானந்தா வித்தியாலயமும் கல்லடி உப்போடையில் உருவாகக் காரணமாயிற்று.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் வெள்ளிக்கிழமை மடத்தில் இயங்கிவந்த மாணவர் இல்லம் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்ட போது, வேலுப்பிள்ளை இல்லத்தைத் தற்காலிகமாக இருப்பிடமாக்கிக் கொடுத்து உதவினார். கே.ஓ.வி. குடும்பத்தின் பாரம்பரிய இல்லமாக அது இன்றும் உள்ளது.



இவர் வழங்கிய காணியில் இன்று சிவபுரி மாணவர் இல்லம், விளையாட்டு மைதானம், சிவானந்தா வித்தியாலயம், மணிமண்டபம், விபுலானந்தர் சமாதி என்பன அமைந்த சிவானந்தா வளாகமாக உள்ளது.

முறக்கட்டான் சேனையிலும் கணேச வித்தியாலயம் என்னும் பெயரில் பாடசாலை ஒன்றை நிறுவி ஒன்பது வருடகாலம் தனது முகாமைத்துவத்தின் கீழ் நடத்தி1926 காலப் பகுதியில் சுவாமி விபுலானந்தரிடம் கையளித்தார்.

கல்விப்பணியுடன் சைவப் பணியும் மேற்கொண்டார். தமது முன்னோரால் உருவாக்கப்பட்ட கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயக ஆலயத்தின் முகாமைப் பொறுப்பை 1918 தொடக்கம் 1947 வரை ஏற்று நடத்தி வந்தார்.

இவ்வாலயம் பெருவளர்ச்சி பெறுவதற்கு சொந்தப் பணத்தையே செலவிட்டு மேற் கண்ட ஆலயங்களையும் உருவாக்கினார். பிரதான கோவிலுடன் அர்த்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம், இராஜ மண்டபம், சண்டேஸ்வரர் ஆலயம், யாக மண்டபம், வசந்த மண்டபம், வடபுற மணித்தூண், கொடிஸ்தம்பம் ஆகியன இவராலேயே உருவாக்கப்பட்டன.

இத்திருப்பணிக்கெல்லாம் தனது உழைப்பின் பெரும் பகுதியைச் செலவிட்டு அறக்கொடையாளராக இருந்து 29 ஆண்டுகள் திறம்பட நிருவகித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு வருகையினால் இப் பிரதேச மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட மறுமலர்ச்சியில் காத்திர மான பங்கையும் பணியையும், அர்ப்பணித்துச் செயற்பட்ட பெரியார் வரிசையில் அமரர் க.உ.வேலுப்பிள்ளை அவர்களுக்கு நிரந்தரமான இடமுண்டு. மட்டக்களப்பின் வரலாற்றிதழ்களில் இத்தகைய இன்னும் பலர் தெரிந்தும், மறைந்தும் உள்ளனர். அவர்களும் வெளிக்கொணரப் பட வேண்டியவர்கள். அப்போது வரலாறு ஒருபக்க நிறைவாயினும் பெறமுடியும்.

சமூகத்திற்கு பெரும் சேவையாற்றி சமூகத்திற்காகவே தன்னை அர்ப்பணித்த இந்த நற்பணியாளனை பலரும் மறந்து விட்டது கவலைக்குரிய விடயமாயினும் அன்னார் ஆற்றிய நற்பணியை இராம கிருஷ்ண சங்கத்தினர் மலர் வெளியீடுகளில் வெளியிடுவது மனதிற்கு சற்று ஆறுதலைத் தருவதாயுள்ளது.

Advt

# வீரப்பனை வேட்டையாடச் சென்ற கூட்டு அதிரடிப்படை குளிரில் அவதி

## டில்லியிடம் இராணுவ உதவி கோரும் மாநில அரசுகள்

(கோயம்புத்தூர்)

சத்திய மங்கலம் காட்டில் சந்தனக் கடத்தல் வீரப்பனைத் தேடிக் காட்டுக்குள் சென்ற தமிழ் நாடு கர்நாடக கூட்டு விஷேச அதிரடிப் படைகளும் மழை, பனிக்குளிரில் அகப்பட்டுத் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பதாகவும் அவர்கள் சிலசமயம் தேடுதல் வேட்டையைக் கைவிட்டுத் திரும்பக் கூடுமென்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தனக்கடத்தல் வீரப்பன் ராஜ்குமார் விடுதலைக்குப் பின் படைகள் தன்னைத் தேடி வேட்டையாடும் என்பதை நன்குணர்ந்திருந்தால் தான் பருவ மழையும் பனியும் காலமும் வரும் வரை ராஜ்குமாரை விடுதலை செய்யாமல் மூன்று மாதங்களுக்கு மேல் கடத்தி வந்தானென்றும் கருதப்படுகிறது.

அடர்ந்த காட்டுக்கள் சரியான பாதைகளும் தெரியாமல் பனிக்குளிரிலும் மழைக்குளிரிலும் படையினர் தன்னை வேட்டையாட முடியாதென்பதும் அவர்களுக்குத் தான் பெரும் இழப்பை ஏற்படுத்த முடியுமென்றும் வீரப்பன் சரியான திட்டத்துடன் செயல்பட்டிருக்கிறானென்றும் கருதப்படுகிறது.

படைகளை எதிர்த்து தாக்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் காட்டுக்குள் வீரப்பன செய்து வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

காட்டுக்குள் சென்ற இரு மாநில அரசுகளின் கூட்டு அதிரடிப்படையினரும் வீரப்பனின் எதிர்ப்பைச் சமாளித்து வெற்றி கொள்வது சுலபமல்ல என்று இரு மாநில அரசுகளும் கருதுகின்றன. இதனால் தமிழ் நாடுகள் கர்நாடக அரசு உயர் அதிகாரிகள் இப்பொது புதுடில்லிக்குச் சென்று மத்திய அரசின் இராணுவ உதவியை வீரப்பனை வேட்டையாடுவதற்குத் தேவை என்பது கோரி வருகின்றனர்.

இப்பொழுது தமிழ் நாடு, கர்நாடக அதிரடிப்படையைச் சேர்ந்தவர்கள் 1500 பேர் சத்திய மங்களம் காட்டுக்குள் வீரப்பனைத் தேடும் வேட்டையில் இறங்கியிருக்கின்றனர். இரு மாநில விஷேச அதிரடிப்படைகளும் கூட்டுத் தலைமையில் அங்கு செயல்பட்டு வருகின்றனர்.

# மத்திய கிழக்குப் பிரச்சினை தீரும் என்பதில் நம்பிக்கை

(மாஸ்கோ)

மத்திய கிழக்குப் பிரச்சினையில் தீர்வு காணப்படும் என்பதில் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக பாலஸ்தீன தலைவர் யஸீர் அறபாத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி விளாடிமீர் புட்டினுடன் பேசுவதற்கு ரஷ்யா சென்றிருக்கும் பஸீர் அறபாத் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளின் போது இப்படி கூறினார்.

பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே நடைபெறும் மோதல்களை முடிவுக்கு கொண்டு வர முடியுமா என்று நிருபர்கள் கேட்டார்கள். இப்பிரச்சினைக்கு கலந்துரையாடி முக்கிய நடவடிக்கை எடுப்பதற்காகவே தாம் ரஷ்யா வந்ததாகவும் அந்நாடு சமாதான நடைமுறையில் இணையருசனையாளராக விளங்கியமையை மறக்க முடியாது என்றும் கூறினார்.

மாஸ்கோவிலிருந்த படி யஸீர் அறபாத் இஸ்ரேலியப் பிரதமர் ஹெட்பராக்குடன் நேற்று தொலைபேசியில் பேசினார். ரஷ்ய அதிபரின் யோசனையின் பேரிலேயே அறபாத் இஸ்ரேலியப் பிரதமருடன் தொலைபேசியில் பேசினார்.

# கோஷ்டி மோதலில் ஐம்பது பேர் பலி !

(சாடினில்)

இரு இனங்களுக்கிடையிலான ஏற்பட்ட கோஷ்டி மோதல் ஒன்றில் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிணறு ஒன்றையும் அதுதொடர்பான நிலைப்பிரச்சினையையும் அடுத்தே இந்தக் கோஷ்டி மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல மாதங்களா நீடித்துவந்த இப்பிரச்சினையை அதிகாரிகள் தீர்த்துவைக்காமையினாலேயே இந்த மோதல் உக்கிரமடைந்து பல உயிரிழப்புக்கும் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.




# காஷ்மீரில் ஆறு இந்துக்கள் பஸ்ஸில் சுட்டுக்கொலை !

காஷ்மீரில் நேற்று பயணிகள் வஸ்வண்டி ஒன்றை தடுத்து நிறுத்திய தீவிரவாதிகள் குழு ஒன்று வண்டியிலிருந்த முஸ்லிம் பயணிகளை வஸ்ஸில் செல்ல அனுமதித்துவிட்டு ஆறு இந்துப் பயணிகளை கீழே இறங்கும்படி கூறி அவர்களை சுட்டுக்கொலை செய்தது.

புனித றமழான் மாதத்தில் காஷ்மீரில் ஒருதலைப் பட்சமாக இந்திய அரசு போர்நிறுத்தம் அறிவித்தபின்னர் நடந்த கொலை இது

இந்தியாவின் போர்நிறுத்தத்தை தீவிரவாதக் கும்பல்கள் யாவரும் நிராகரித்துவிட்டன. முஜாகிர் குழு மட்டுமே இதை ஏற்றுக்கொண்டுள்ளது.

# வடக்குக் கிழக்கில் புதிய கல்வித்திட்டம் காலம் தாழ்த்தியே ஏற்படுத்தப்பட்டது

## வலயக்கல்விப் பணிப்பாளர் உரை

(திருமலை நிருபர் எஸ்.எஸ்.குமார்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் புதிய கல்வித் திட்டம் காலம் தாழ்த்தியே ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக 9ம் தரத்தில் பாடசாலை மட்ட கணிப்பீடு சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை. மாகாண ரீதியாக நடத்தப்பட வேண்டிய 9ம் தரத்தினருக்கான பொதுப்பரீட்சை வடக்கு கிழக்கு மாகாணத்தில் மாவட்ட மட்ட பரீட்சையாகவே நடத்தப் படுகின்றது. இவ்வாறு திருகோண மலை வலயக்கல்விப் பணிப்பாளர் கு.திலகரெத்தினம் தெரிவித்தார்.

திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை(18-11-00) இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்பட்ட "புதிய கல்வி சீர்திருத்தமும் தமிழ் மொழி பாடசாலைகளில் அதன் தாக்கமும்" என்ற கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சி.குமரகுருதாசன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் நிர்வாக செயலாளர் சி.சரவணபவானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். வலயக்கல்விப் பணிப்பாளர் கு.திலகரெத்தினம். தொடர்ந்து உரையாற்றுகையில்

புதிய கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமைக்கு நாமும் ஒரு காரணம். இதனை நடைமுறைப் படுத்த வேண்டிய ஆர்வம் கடமை உணர்வு இல்லாததன் காரணமாக 60 வீதமே செய்றபடுத்த முடிந்தது.

9ம் தர மாணவர்களுக்கு மாகாண ரீதியாக பொது பரீட்சை வைத்து இதில் அவர்கள் பெறும் புள்ளியும், பாடசாலைகளில் நடத்தப்பட்ட கணிப்பீடு புள்ளியையும் இணைத்து மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களின் ஆளுமை, சமூகத் தொடர்புகள், உளவியல் நிலை, திறன்கள் என்பன ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் எமது பாடசாலைகளில் பாடசாலை மட்ட கணிப்பீடு நூற்றுக்கு நூறு வீதம் இடம் பெறுவதில்லை. அறிவு ரீதியாகவே மாணவர்களை மதிப்பீடு செய்கின்றோம்.

மாணவர்களின் பல்வேறுபட்ட குணங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். ஆசிரியர்கள் தனியாக செயற்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. மாணவர் களின் திறன்களை வளர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

பிள்ளைகள் தேடிக் கற்கும் வாய்ப்பை புதிய கல்வித் திட்டம் வழிவகுக்கின்றது. கிராமப்புறங்களில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமை காரண மாக வருங்காலத்தில் அம் மாணவர்கள் விஞ்ஞான பாடத்தை கற்க முடியாத நிலை தோன்றவுள்ளது.

மூளைசாலிகள், திறமைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுவதால் எமது நாட்டின் கல்வித்தரம் குறைவடைந்து கொண்டே செல்கின்றது. அறிவாளிகள் மதிக்கப்பட வேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், கல்முனை மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட தலைவர்கள் செயலாளர்கள் அடங்கலாக 15பேர் பங்கு கொண்டனர்.

சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் நன்றியுறை வழங்கினார்.

# ஓய்வூதிய கொடுப்பனவு தினங்கள்

எதிர்வரும் 2001 ஆம் ஆண்டில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஒவ்வொரு மாதத்திலும் செய்யப்பட வேண்டிய தினங்கள் பற்றிய சுற்று நிருபம் ஒன்றினை ஓய்வூதியத் திணைகளம் வெளியிட்டுள்ளது. ஓய்வூதியப் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட இச்சுற்று நிருபம் சகல அரச கணக்கீட்டு பணிப் பாளர் நாயகம், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், தபால் மா அதிபர்கள் ஆகியோர்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய தினங்கள் பின்வருமாறு;

ஜனவரி - 11(வியாழக்கிழமை)
பெப்ரவரி - 09(வெள்ளிக்கிழமை)
மார்ச் - 08(வியாழக்கிழமை)
ஏப்ரல் - 10(செவ்வாய்க்கிழமை)
மே - 10(வியாழக்கிழமை)
ஜூன் - 07(வியாழக்கிழமை)
ஜூலை - 10(செவ்வாய்க்கிழமை)
ஆகஸ்ட் - 09(வியாழக்கிழமை)
செப்டெம்பர் - 11 (செவ்வாய்க் கிழமை)
ஒக்டோபர் - 04(வியாழக்கிழமை)
நவம்பர் - 08(வியாழக்கிழமை)
டிசெம்பர் - 11(செவ்வாயக்கிழமை)

## அம்பாறை மாவட்டத்தில் பனை நடும் திட்டம்

(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை பனை அபிவிருத்தி சபை அம்பாறை மாவட்டத்தில் ஐம்பதாயிரம்(50,000) பனம் விதைகளை நடும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்கென பனை உற்பத்தியாளர்களிட மிருந்து பனம் விதைகளை நியாய விலையில் கொள்வனவு செய் யவும் உள்ளது. மொத்த மாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்ய விரும்புவோர் ஒருங்கிணைப்பாளர், பனை அபிவிருத்தி சபை அலுவலகம், கல்முனை எனும் முகவரியுடனோ அல்லது 067-20405 எனும் தொலைபேசி இலக்கத் துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# சித்தாண்டி வெல்லாவெளி வெள்ள அகதிகளுக்கு உதவி

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் கடும் பாதிப்புக்குள்ளான சித்தாண்டி மற்றும் வெல்லாவெளி ஆகிய பிரதேசத்திலுள்ள சுமார் ஆறாயிரம் குடும்பங்களுக்கு வோல்ட் விஷன் என்ற சர்வதேச நிறுவனம் உலர் உணவுப் பொருட்களை வழங்கி யுள்ளதாக நிறுவனத்தின் கிழக்குப் பிராந்திய நடவடிக்கைக் குழுத் தலைவர் சி.சுதர்ஷன் தெரிவித்தார்.

சித்தாண்டி பிரதேசத்தில் இடம் பெயர்ந்து வாழும் 2000 குடும்பங்களுக்கும் வெல்லாவெளியில் நான்காயிரம் குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

தரவை மற்றும் அகத்தியர் ஆகிய குளங்கள் உடைப்பெடுத்ததையடுத்து சித்தாண்டி பகுதியில் வீடு வாசல்களை இழந்து மக்கள் நிர்க்கதியான நிலையில் பொதுக் கட்டடங்களில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## றோட்டரிக் கழகத்தின் டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(நிருபர் எம்.சோமு)

மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசப்பகுதியில் அண்மையில் டெங்கு நோயினால் ஒருவர் மரணமடைந்ததும், பலருக்கு நோய் பீடித்திருப் பதையும் அறிந்து றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு கருத்தரங்கு இடம் பெற்றது.

இப்பகுதியின் பொது அமைப்புக்களும், சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து சிரமதான மூலமும் வடிகால், குப்பை கூழங்களை அகற்றி துப்புரவு செய்ததுடன் பொது மக்களுக்கு டெங்கு நோய் பரவாமல் தடுப்பதற்கு ஏற்றவாறு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டது.

## குழை வெட்டியவர் இடது காலிழந்தார்.

(யாழ் நிருபர்)

ஆட்டுக்கு குழை வெட்ட பற்றைக் காணி ஒன்றினுள் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு முழங்காலுக்கு மேல் இடது காலை இழந்துள்ளார்.

அச்சுவேலி தம்பாலை யில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கணபதி தம்பிப்பிள்ளை(வயது73) என்பவரே படு காயமடைந்தவர். இவர் யாழ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஒளி விழா - 2000

மட் / தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயத்தில் வருடந்தோறும் இடம்பெற்றுவரும் ஒளிவிழா இம்முறையும் நடத்துவதற்கான ஏற்பாடுகளை பாடசாலை கிறிஸ் தவ ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ் ஒளி விழா எதிர்வரும் 2000.11.28 ஆந் திகதி மு.ப. 9.30 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் நல்லரெத்தினம் தலைமையில் இடம் பெறவுள்ளது. பிரதம அதிதியாக மண்முனைப்பற்று பிரதேசக் கல்விப் பணிப்பாளர் க. தியாகராஜா சிறப்பு விருந்தினராக தாழங்குடா புனித ஸ்நாபகர் தேவாலய அருட்தந்தை பி.யோசப் அடிகளார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். மாணவர்களின், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. நிகழ்ச்சி ஒழுங்குகளை பாடசாலை கிறிஸ் தவ ஆசிரியர்கள் சார்பில் திருமதி.இ.அமலநாதன் மேற் கொண்டு வருகிறார்.

## பல்கலைக்கழக அனுமதியில் தே.இ.சே.மன்ற சான்றிதழ் அனுமதிப்பு

(ஐ.எல்.ஜலீல்)

"இவ்வருடம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் இளைஞர் பரிசளிப்பு-2000 போட்டி நிகழ்வானது எந்த இளைஞனிடமோ, யுவதியிடமோ மறைத்து கிடக் கின்ற திறமைகளினை வெளிக் கொண்டு வந்து; திறமைசாலியான இளைஞனாக, யுவதியாக சமூகத்துக்கு காண்பிப்பதற்காகத் தான் இவ்வாறான கலை இலக்கிய பரிசளிப்பு விழா முக்கியத்துவம் பெறுகின்றது. சென்ற வருடம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவாகிய நாடகம் தேசிய மட்ட போட்டியில் முதலிடம் பெற்றமைக்காக பரிசளிப்பு விழாவில் ஜனாதிபதியினால் 70,000 ரூபா பணமும், சான்றிதழும் வழங்கப் பட்டது. இச்சான்றிதழ் பல்கலைக் கழக அனுமதியில் ஓரிரு புள்ளிகள் குறையுமிடத்து பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்ற இளைஞர் பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக வருகை தந்த கிழக்கு மாகாண இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் பொன் செல்வநாயகம் கூறினார்.

இளைஞர் சேவை அதிகாரி எஸ்.எம்.ஏ.லத்தீப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக மாவட்ட இ.சே.அதிகாரி எஸ்.எம். ஏ.காதர், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.ஏ.மன்சூர், கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் கலாபூசணம் மருதூர் ஏ.மஜீட் அதிதிகளாக இளைஞர் சேவைகள் அதிகாரிகளான ஏ.ஜி.ஏ.கபூர், ஏ.முபாறக் அலி, எம்.ரி.எம். ஹாறூன், ஏ.எல்.எம். இஸ்மாயில், ஏ.சஸி; செல்வி ஜெகதீஸ்வரி இன்னும் பலரும் 200க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளும் கலந்து கொண்டார்கள்.



கல்முனை வலய அதிபருக்கான கூட்டம் அண்மையில் கல்முனை மல்மூத் மகளீர் கல்லூாரியில் நடைபெற்ற போது அம்பாறை மாவட்ட மேலதிக் கல்விப்பணிப்பாளர் எம்.ஏ.எம்.சாபிதீன் உரையாற்றுவதையும் அருகில் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.நிசாம், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஜலீல் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

(படம்:- காதர்.எம்.தௌபீக்)

## அமைச்சர் பீரிஸ் தலைமையில் டெங்குவைக்

(நமது நிருபர்)

குளியாப்பிட்டி பகுதியில் கௌரவ அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களின் தலைமையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துமுகமாக பொது நல அமைப்புக்களும் அப்பகுதி மக்களும் ஒன்றிணைந்து மருந்து தெளித்து சிரமதானங் களை எதிர்வரும் 28ம் திகதி வரை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதி மக்களுக்கு சுகாதாரப் பரிசோதகர்கள் மூலமாக இந்நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்களை வழங்கி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

# சுகாதாரக் கண்காடச

(முபா)

வீரத்திடல் அல்ஹிதாயா மகாவித்தியாலயத்தில் சுகாதாரக் கண்காட்சி ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

உடற்கல்வி ஆசிரியர் கே.எம்.தமீம் அவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கண் காட்சியில் அதிபர் எம்.எல்.ஏ. கையும் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இக்கண்காட்சியில் மனித நேயத்தை தூண்டும் சுகாதார வாக்கியங்கள் சுவரோவி யங்கள், டெங்கு சம்பந்தமான படவிளக்கங்கள் போன்றவைகள் இடம்பெற்றன. இக்கண்காட்சி மாணவர்களிடையே ஒரு விடயதை திட்டமிடக்கூடிய ஆற்றலையும் பேச்சு வன்மையையும், தலைமைத்துவத்தையும் வளர்த் துக் கொள்ளக் கூடியதாக அமைந்திருந்ததாக ஆசிரியர் கே.எம்.தமீம் குறிப்பிட்டார்.

# தமிழர்களுக்கு ...

ஆதாரமாக்கொண்டு சிங்கள அரசு தமிழருக்கெதிரான இந்தப்போரை நடத்திவருகின்றது.

பெரியதொரு அழிவுப்போரை நடத்திக்கொண்டு பெருமளவில் அப்பாவித்தமிழர்களை கொன்றொழித்துக் கொண்டு சமாதானத்திற்காகவே சண்டையை நடத்துவதாக சந்திரிகா அரசு ஏமாற்றி வருகின்றது.

ஆயினும் சந்திரிகா அரசு நடாத்தும் போரின் நோக்கம் என்ன என்பதையும் இப்போரினால் புலிகளை வெற்றிகொள்ளவோ அன்றில் தமிழர்களின் பிரச்சினையை தீர்க்கவோ முடியாது என்று மேற்குலகு உணரத்தொடங்கியுள்ளது.

### கடிவாளம் உலகநாடுகளிடமே

எனவே சிங்கள ஆட்சியாளரை சமாதானப் பாதைக்கு திருப்பவேண்டுமென்றால் சிங்களத்துக்கு பொருளாதாரச் தீனிபோட்டு வரும் உலகநாடுகளிடம் தான் கடிவாளம் இருக்கிறது.

தென்னிலங்கை சமூகக் கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்துவரும் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களை காருண்யத்துடன் அரவணைத்துக்கொள்ளுமென்று நாம் நினைக்கவில்லை.

### பிரிந்து செல்வதே ஒரே வழி

சிங்கள தேசம் இனவாதப் பிடியிலிருந்து விடுபடாமல் தமிழர்களுக்கெதிரான அடக்குமுறையைத் தொடருமானால் நாம் பிரிந்துசென்று தமிழீழ தனியரசை அமைப்பதைவிட வேறுவழியில்லை.

காலமும் வரலாறும் எமது போராட்ட வரலாற்றுக்கு நியாயம் வழங்கியே தீரும் அப்பொழுது உலகமும் அதனை ஏற்றுக் கொள்ளும்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மை அழித்துக்கொண்ட மாவீரர்கள் சரித்திரமாக நின்று எமக்கு வழிகாட்டுவார்கள். அந்தக் கர்மத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி

### மாவீரர்களே வழிகாட்டிகள்

எமது மண்ணிற்காக எமது மக்களுக்காக விடுதலை என்ற உன்னத விழுமியத்திற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்முயிர் வீரர்களை நாம் நினைவுகொள்ளும் இன்றைய நாள் ஒரு புனித நாள் இந்தநன்னாளில் எமது ஆத்மீகக் கனவுகளை அப்புனிதர்களுக்காத் திறந்துகொள்வோம்.

நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக்கலந்துவிட்ட உணர்வுகளுக்காக காலத்தால் சாகாது என்றும் எம்முன் உயிர்வாழும் இம்மாவீரர்களை இன்று கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமை கொள்கிறது.

மாவீரர் நினைவாக ஈகைச்சுடரை ஏற்றும் போது அந்த எரியும் சுடரில் அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில் அந்த அற்புதமான படிமத்தில் நானோரு தரிசனத்தைக் காண்கின்றேன்.

அக்கினியாக் பிரவாகித்தபடி ஆயிரம் ஆயிரம் மனித ஜீவனகள் நெருப்பு நதிபோல் ஒளிகாட்டி வழிகாட்டிச்செல்லும் ஒரு அதிசய காட்சி திடீரென மனத்திரையில் தோன்றி மறையும் மாவீரர்களே எமது சுதந்திரப் பயணத்தில் வழிகாட்டிகள். அவர்களது வாழ்வும் வரலாறும் எமது இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவை அவர்களே எமக்கு வழிகாட்டிகள்.

மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அவர்களை நினைவு கொள்ளும் இந்தப் புனிதநாளில் நாமும் எமது இதயங்களின் இலட்சிய, நெருப்பை மூட்டிக்கொள்வோம். எமது தேசத்தின் சுதந்திரத்திற்காக அந்த உன்னத இலட்சியத்தை அடைவதற்காக எத்தகைய இடர்களையும், எத்தகைய துன்பங்களையும் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ள தயாராகயிருப்போமென நாம் எமக்குள் வீரசபதம் எடுத்துக்கொள்வோம்.

## யாழ்ப்பாணத்தின்


1ம் பக்கத் தொடர்ச்சி

••••••••••••••••••••••••

## வாசல்படியில் நிற்கின்றோம்.

எனது அன்பான மக்களே எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாம் ஒரு முக்கிய திருப்புமுனையை அடைந்திருக்கிறோம்.

எமதுப்படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலை நாட்டி எமது தேசத்தின் கலாசார தலை நகரான யாழ்ப்பானத்தின் வாசற்படியை அணமித்து நின்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி, குடாநாட்டை வன்னி மானிலத்துடன் துண்டித்திருந்த



ஆனையிறவு பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்.

தகர்க்க முடியாத இரும்புக் கோட்டையாக 20,000 இராணுவத்தினருடன் தொடர்வலய முகாம்களும் சூழப்பட்டு பரந்தனிலிருந்து பளை வரையும் கரையோரத் தளங்களோடு 80 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்ட ஆனையிறவு பெருந்தளம் எம்மால் வெற்றி கொள்ளப்பட்ட நிகழ்வானது உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்ட மகத்தான இராணுவ சாதனையாகும்.

இப்புகழ் ஈட்டிய வரலாற்றுச் சமரில் புலிகள் வரித்த நுட்பமான போர் வியூகங்களும் திகைப்பூட்டும் தரையிறக்கங்களும் வீரர் மிகுந்த தாக்குதல்களும் தந்திரோபாயங்களும் போரியால் கலையில் எமது விடுதலை இயக்கத்தின் அபாரமான வளர்ச்சியையும் எழுச்சியையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டியது வெளிநாட்டில் பயிற்சி பெற்று உள்நாட்டில் களமாடி நிறுத்தி வைத்த சிங்களத்தின் சிறப்புப்படையணிகள் இச்சமரில் சிதைக்கப்பட்டன. இந்நிகழ்வானது சிங்களத்திற்கு இராணுவ பொருளாதார ரீதியில் முண்டு கொடுத்து நிற்கும் உலக வல்லரசுகளை திகைப்பில் ஆழ்த்தியது.

### அரைப்பிறை வியூகம்

ஆனையிறவு பெருந்தளத்தை வெற்றி கொண்டு தென்மராட்சியிலும் வடமராட்சி கிழக்கிலும் பெருமளவு நிலங்களை மீட்டெடுத்த அதே வேகத்தோடு கிழக்கு அரியாலை வழியாக எமது படையணியொன்று யாழ்ப்பான நகராட்சி எல்லைக்குள் பிரவேசித்தன. அதேசமயம் எமது மற்றைய படையணிகள் தனங்கிளப்பு வழியாக நாவற்குழி, கைதடி மட்டுவில் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தன. யாழ்ப்பாண நகரம் அரைப்பிறை வியூகத்தில் சுற்றிவளைக்கப்பட்டது. இதனையடுத்து ஒரேயொரு ஆகாய விநியோக மார்க்கமாக விளங்கிய பலாலிப் பெருந்தளம் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகியது. மின்னல் வேகத்தில் நிகழ்ந்த இத் திடீர் திருப்பங்களின் விளைவாக சந்திரிகா அரசு என்றுமில்லாத இராணுவ நெருக்கடியை சந்தித்தது. சந்திரிகா அம்மையார் நிலைகுலைந்து போனார்.

### அபாயச் சங்கை ஊதினார் சந்திரிகா

ஆயினும், இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி சர்வதேச உலகத்தின் உதவிபெற்று நெருக்கடியை சமாளிக்கத் திட்டமிட்டார் யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ந்தால் அங்குள்ள 30,000 சிங்களப் படையினருக்கு உயிராபத்து ஏற்படுமென உலகெங்கும் அபாயச் சங்கை ஊதினார். இந்த அபாய அறிவிப்பைக் கேட்டதுமே அனைத்துலக நாடுகளும் அம்மையாருக்கு உதவி செய்ய முன்வந்தன.

இந்திய கடற்படையின் உதவியுடன், சிங்கள இராணுவத்தினரை பாதுகாப்பாக மீட்டெடுக்க இந்தியா முன்வந்தது. இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, போன்ற நாடுகள் அவசர ஆயுத உதவிகள் வழங்க முன்வந்தன: முழு உலகமுமே அம்மையாரின் பின்னால் அணி திரண்டது. மிகவும் சக்திவாய்ந்த நவீனரக அழிவு ஆயுதங்கள் யாழ்ப்பானத்தில் குவிக்கப்பட்டன. இஸ்ரேலும் ரஷ்யாவும் நவீனரக போர் விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும் அனுப்பிவைத்தன. அவசர அவசரமாக ஆயுத ரீதியில் சிங்கள இராணுவ இயந்திரம் வலுப்படுத்தப்பட்டது.

அபாயச்சங்கை ஊதி உலகத்தின் உதவியைப்பெற்று இராணுவத்தைப் பலப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போரைத் தொடரும் சந்திரிகாவின் தந்திரோபாயம் வெற்றி பெற்றது.

### போர்த்திட்டங்களை தாமதித்தோம்

யாழ்பாணச் சமரில் ஒருதலைப் பட்சமானக உலக நாடுகள் குறுக்கிட்டு சிங்களத்துக்கு தாய்ச் உதவிகளை வழங்கியதால் எமது போர்த் திட்டங்களைத் தாமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. 1995 யில் யாழ்ப்பாண நகரை சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்த போது அதன் விளைவாக 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து மாபெரும் மனித அவலம் ஏற்பட்ட போதும் உலகம் கண்களை மூடி மௌனம் சாதித்தது.

### சிங்கள அரசுக்கு உதவும் உலகம்

ஆனால் இப்போது சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு படிப்படியாக உடைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பானம் விடுதலைப் புலிகளின் கைகளுக்கு வரும் புறநிலைகள் ஏற்பட்டபோது உலக நாடுகள் பதட்டமடைந்து சிங்கள இராணுவ ஆட்சியாளர்களுக்கு உதவிகளைச் செய்வது எமக்கு ஒருபுறத்தில் ஏமாற்றத்தையும் மறுபுறத்தில் கவலையையும் கொடுக்கின்றது. யாழ்ப்பாணம் சிங்களதேசத்திற்கு உரித்தானதல்ல யாழ்ப்பாணம் மக்களுக்கே உரித்தானது. இறையாண்மை என்பது ஒரு அரசின் தெய்வீக சொத்துரிமையல்ல இறையாண்மையானது மக்களிடமிருந்தே பிறக்கின்றது. இது மக்களுக்கே சொந்தமானது. யாழ்ப்பாணத்தின் இறையான்மை யாழ்ப்பாண மக்களுக்கே சொந்தமானது. இராணுவ ஆக்கிரமிப்பு மூலம் தமிழரின் வரலாற்று மண்ணில் சிங்களத்தின் இறையாண்மையைத் திணித்துவிட முடியாது. தமிழரின் விடுதலைப்படை என்ற ரீதியில் நாம் எமது மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு இடமளிக்கப் போவதில்லை.

### யாழ்ப்பாணத்தை மீட்டே திருவோம்

எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தகைய சக்திகள் எதிர்த்து நின்றாலும் எமது விடுதலை இயக்கம் யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்தே தீரும்.

எல்லாச் சமர்களுக்கும் சமராக விளங்கிய ஆனையிறவுச் சமரிலும் வடக்கின் தென்மராட்சி, வடமராட்சி யாழ்ப்பாண நகராட்சி பகுதிகளில் நிகழ்ந்த சமர்களிலும் களமாடி சாதனை படைத்த எல்லாப் போராளிகளுக்கும் படை நடத்திய தளபதிளுக்கும் எமது பாராட்டுக்கள். எல்லைப்படையாக அணிதிரண்ட எமது மக்கள் இந்தச் சமர்களில் நேரடியாக பங்கு கொண்டு எமது விடுதலைப் போராட்டத்துக்கு புதிய தெம்பையும் பலத்தையும் அளித்தது. குடும்பப் பொறுப்புக்களைச் சுமக்கும் இவர்கள் தேசப்பற்றால் ஈர்க்கப்பட்டு ஆயுதப் பயிற்சி எடுத்து பெரும் நில மீட்பு சமர்களில் பங்கு கொள்வது எமது தேசத்திற்கு பெருமை சேர்க்கிறது. எமது விடுதலை பேராட்டத்தில் பரந்துபட்ட பொதுமக்கள் இணைந்து கொள்ளும் போதுதான் அது மக்கள் போராட்டமென்ற உயர்நிலை அரசியல் பரிமாணம் பெறுகிறது. மக்கள் பங்களிப்பு எமது ஆயுதப் போராட்டத்துக்கு மக்களின் பங்களிப்பு மேலும் மேலும் பெருக வேண்டும். அதுதான் எமது போரட்டத்தில் பாரிய திருப்புமனைகளை ஏற்படுத்தும் அதுதான் எமது மண்ணின் மீதான் எதிரியின் ஆக்கிரமிப்புக்கு முடிவு கட்டி எமது இலட்சியத்தை வெகு விரைவில் நிறைவு பெறச் செய்யும். எனவே அன்பார்ந்த மக்களே மீண்டும் ஆறாண்டு காலம் சந்திரிகாவின் ஆட்சி தொடரப் போகிறது. இந்த ஆறாண்டு காலமும் இத்தீவில் அமைதி, நிலவப் போகிறதா? அல்லது வன்முறை தலைவிரித்தாடுமா? என்பது சந்திரிகா கடைப்பிடிக்கப் போகும் கொள்கையிலும் அணுகுமுறையிலும் தான் தங்கியிருக்கிறது. இது இனவாத அரசே இந்த அரசானது தென்னிலங்கை இனவாத சக்திகளின் ஆதரவோடுதான் ஆட்சி பீடம் ஏறியிருக்கிறது. புலிகளுக்கு எதிராக போர் முரசு கொட்டித்தான் மிகவும் மோசமான தேர்தல் மோசடிகள் வன்முறைகள் வாயிலாகவே வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. இனவாதக் கடும் போக்காளர்களே இவ்வரசில் முக்கிய பொறுப்புக்களை வகிக்கிறார்கள். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் பதவியேற்றிருக்கிறார்கள்.

ஆயுத வன்முறையைப் பாவித்து மிகவும் கேவலமான தேர்தல் மோசடிகளைச் செய்து ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கிய தமிழ் துரோகிகளும் இந்த ஆட்சி பீடத்துக்கு முண்டு கொடுத்து நிற்கிறார்கள். இப்படியாக இனவாதிகளையுஞம் தமிழினத் துரோகிகளையும் நிர்வாக உயர்பீடங்களின் அமர்த்தி அவர்களது தயவில் தங்கி நிற்கும் சந்திரிகா அரசு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனைகளைத் தீர்க்க தெளிவான முடிவு எடுக்குமா என்பது சந்தேகமே. போர் பற்றியும் சமாதானம் பற்றியும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது பற்றியும் இந்த அரசிடம் ஒரு தெளிவான பார்வையும் திடமான அணுகுமுறையும் இருக்கவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களே முன்வைக்கப் படுகின்றன.

### கருநாக்கால் பேசும் அரசு

பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களும் கடும் போக்காளரும் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருப்பதால் இந்த அரசானது கரு நாக்குகளில் பேசுகிறது.மிகவும் குழப்பகரமாகப் பேசுகிறது. புலிகளுடன் பேசத் தயார் என ஒரு குரலும் புலிகளை கூண்டோடு அழிப்போம் என இன்னொரு குரலும் புலிகள் சரணடையும் வரை போர் ஓயாது என மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதம மந்திரி, ராணுவத் தளபதி ஆகிய உயர் அதிகார பீடங்களிலிருந்து இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப்படுகின்றன.

இந்த வித்தியாசமான குரல்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான பார்வையாளர்களை திருப்திப்படுத்தும் நோக்குடனேயே எழுப்பப்படுகின்றன. சந்திரிகாவும் கதிர்காமரும் வெளிநாடுகளுக்கு ஏமாற்று வித்தை காட்ட, பிரதம மந்திரியும் இராணுவத் தளபதியும் உள்நாட்டு இனவாத சக்திகளுக்கு தீனிபோட்டு வருகின்றனர்.

மேற்குலக நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியல் தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர் மூலமாக தமிழரின் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாதென்பதை வலியுறுத்துகின்றன. எனவேதான் மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரச்சார அறிக்கைகளை சந்திரிகா வெளியிட்டு வருகின்றார். சமாதானம் என்றும் பேச்சுவார்த்தை என்றும் அதிகாரப் பரவலாக்கம் என்றும் அரசியலமைப்பு என்றும் வார்த்தைப்பிரயோகங்களைக் கையாண்டு மேற்குலகின்கண்களுக்கு மண்தூவிவருகின்றனர்.

### சந்திரிகா சமாதான பிரியையல்ல

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரையில் சந்திரிகா ஒரு சமாதான பிரியை அல்ல இராணுவத்தீர்வில் நம்பிக்கைகொண்ட ஒரு கடும்போக்காளராகவே நாமும் எமது மக்களும் கருதுகின்றோம். அவரது ஆறாண்டுகால அரசியல் வரலாறும் தமிழ்மக்கள் தொடர்ந்து இராணுவ பொருளாதார கொடுமைகளுக்கு ஆளாகிவரும் அவரது அணுகுமுறை சமீபத்திய அவரது போர் தயாரிப்பு நடவடிக்கைகளுமே எம்மையும் எமது மக்களையும் இத்தகைய நிலைப் பாட்டிற்குத் தள்ளியது. இராணுவ செலவீனத்திற்கு ஒதுக்கப்படும் பெருந்தொகை நிதி பாரிய அளவிலான ஆயுதக் கொள்வனவு இடைவிடாது படைக்கு ஆள்சேர்ப்பு விலகிய இராணுவத்தினரை விரட்டிப்பிடித்தல் இப்படியாக இராணுவ இயந்திரத்தை பலப்படுத்தி போருக்குத் தயார்படுத்தும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது சந்திரிகா ஒரு இராணுவ வாத கடும்போக்காளரே என்பது புலனாகும்.

### சந்திரிகாவின் குழப்பமான பார்வை

இம்மாதம் ஒன்பதாம் திகதி புதிய பாராளுமன்றத்தை திறந்து வைத்துப் பேசிய சந்திரிகா தமிழரின் இனப்பிரச்சினை குறித்து வெளியிட்ட கொள்கைப் பிரகடனத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் சந்திரிகாவின் குழப்பமான பார்வையும் அணுகுமுறையும் தெளிவாகும். இந்த அறிக்கையில் தமிழரின் இனப் பிரச்சினை தோற்றம் பற்றி விளக்கமுனையும் சந்திரிகா கடந்த 50 ஆண்டு காலமாக தமிழருக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது என்பதை ஒத்துக்கொள்கின்றார்.

ஆயினும் தமிழர் என்று குறிப்பிடாமல் சிறுபாண்மை சமூகங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்று கூறுகின்றார்.

இந்நாட்டு அரசியல் சமூக பொருளாதார அதிகாரக்கட்டமைப்பில் பங்குகொள்வதற்கு சிறுபாண்மைச் சமூகங்களுக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை அது தன் நியாயமான தோற்றப் பாட்டுக்கு உண்மையான காரணமென்று சந்திரிகா விளக்கமளிக்கிறார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ் மக்களுக்கு எதற்காக அநீதி இழைக்கப்பட்டது. யாரால் இழைக்கப்பட்டது. எப்படி எந்த வடிவில் இழைக்கப்பட்டது. என்ற கேள்விக்கு சந்திரிகா விளக்கம் தரவில்லை. மாறாக தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த அநீதிகள் அனைத்துக்கும் அந்நிய காலனித்துவம் மீது பழியைச் சுமத்திவிடுகிறார் சிறிலங்காவின் அரசியல் அமைப்புச் சட்டங்கள் காலனித்துவ அதிகார கட்டமைப்பில் இருந்து உருக்கொண்டது என்றும் இவை எமது சமூகத்தில் நிலவும் புறநிலைக்கு ஏற்றதாக சொல்ல வேண்டும். சிறுபாண்மை சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இந்த அரசியல் சட்டங்களே காரணமாக இருப்பதாகவும் சந்திரிகா கூறுகின்றார்.

ம் பக்கம் பார்க்க

# தொண்டர் ஆசிரியர் பிரச்சினைக்கு ஒரு மாதகாலத்திற்குள் தீர்வு !

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(சி. நாகேந்திரன்)

### மட்டக்களப்பு கல்வி வலய அலுவலகத் திற்கு முன்பாக மட்/ தொண்டர் ஆசிரியர் கள் நேற்று காலை 9.00மணியளவில் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர்

இப்போராட்டம் தொண்டர் ஆசிரியர் தலைவர் சா. சுதாகரன் தலைமையில் இடம்பெற்றது. 50க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டதுடன்.

சுட்டெரிக்கும் வெயிலுக்கு மத்தியிலும் தங்கள் போராட்டத்தை நடாத்தினர்.

பி. ப 1..00 மணிக்குப் பின் இத்தலத்திற்கு விரைந்த மட்/ மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் விஜிதங்கராசா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப் புரையின் பேரில் உண்ணா விரதப்போராட்டத்தை குளிர்பானம் வழங்கி முடித்துவைத்தார்

பின்னர் தொண்டர் ஆசிரியர் தலைவரை ஈ.பி.டி.பி காரியாலயத்திற்கு அழைத்துச் சென்று தொலைபேசி ஊடாக அமைச்சரிடம் தொடர்புகொண்டு தொண்டர் ஆசிரியர் பிரச்சினை பற்றி கூறிய போது இதுதொடர்பாக தான் கல்வி அமைச்சரிடம் கலந்துரையாடியுள்ளேன். இன்னுமொரு மாத காலத்துக்குள் உங்கள் பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுத் தருகின்றேன் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப் பட்டது.

# மட்/புனித மிக்கேல் கல்லூரி பரீட்சைப் பெறுபேற்றில் முன்னனி!

## மருத்துவப் பிரிவில் சிவானந்தா முதல் நிலை

(கிருபா, செல்வா)

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்று முடிந்த க.பொ.த (உயர்தரம்) பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம், வெளியாகின. அதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டப் பிரதான பாடசாலைகளிலிருந்து பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றோரின் எண்ணிக்கையும், அதனில் சிறந்த பெறுபேறுகளும் வருமாறு:

**மட்/சிவானந்தா தேசிய பாடசாலை:**

மருத்துவம்: இருவர்

1. எஸ்.ஜெகதீபன்-3A-1C
2. அஸ்கர்-1A-2B-1C

மருத்துவப்பிரிவில் எஸ்.ஜெகதீபன் மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

உயிரியல்: இருவர்

1. எஸ்.ஜெயக்குமார்-4C
2. வே.சுதர்சன்-4C

வணிக முகாமைத்துவம்: இருவர்

1. எஸ்.கேதீஸ்ராஜா-2A-B-C
2. எஸ்.விஜயபாலன்- 2A-B-C

பொறியியற்துறை: - ஒருவர்

1. எம்.பிரேமராஜ் - 2A-2C

பௌதிகவியல்: ஒருவர்

1. என்.மதியழகன்-4C

கலைத்துறை: மூவர்

1 .எஸ். அரவிந்தன் - 2A-C
2. எஸ்.பத்மநாதன் - 2A-C
3. கே.ஜனார்த்தன் - A-2B

02 **மட்/விவேகானந்தா மகளிர் வித்தியாலயம்**

கலைப்பிரிவு - மூவர்

1. சி. கோபிகா - A-2B
2. த.மிருனாலினி - A-2B-C
3. கி.கலைமகள் - A-B-C

03 **மட்/ புனித மிக்கேல் தேசிய பாடசாலை:**

மருத்துவப்பிரிவு: இருவர்;A-2B

பொறியியற்பிரிவு: 11 பேர்

இப்பாடசாலையில் இம்முறையே 1·1 பேர் பொறியியற் பீடத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

வணிகவியல்: 4 பேர் (சிறந்த பெறுபேறு 2A-B)

04 **மட்/புனித சிசிலியா மகளிர் வித்தியாலயம்:**

மருத்துவம்: ஒருவர்

ரா.அகிலா - A-B-C

வர்த்தகப்பிரிவு: மூவர்

1. ஜெ.திருச்செல்வி- A-B-B
2. ஜெ.சாந்ததர்மினி - 2Ā -2B
3. த.டிலாந்தினி -A-2C

கலைப்பிரிவு : மூவர்

1. சு.சுதர்ஜினி -A-2B
2. ந.பார்மினி - 2A-B-C
3. சி.நீரஜா - 2A-B-C

**மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி**

மருத்துவம் :6 பேர்

1.என்.நவரூபன் - A-2B-C
2.ரி.குணரத்தினம் - 3B-C
3.வி.விஜிதரன் - 2B-2C
4.எஸ்.ஸ்ரீ கிருஷ்ணா- 2B-2C
5.ரி.துஷ்யந்தன் - B-2C
6.என்.செந்தூரன் - B-2C

பௌதீகவியல்: 5 பேர்

முகாமைத்துவம் : ஒருவர்

1.கே.திருச்செல்வம்: 2A-C

கலைப்பிரிவு : இருவர்

சிறந்த பெறுபேறு 2A-S

**மட்/ வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை:**

மருத்துவம் : 5 பேர்

உயிரியல் : 18 பேர்

வணிக முகாமைத்துவம்: 9 பேர்.

இப்பாடசாலையிலிருந்து தோற்றிய பிரசாந்தி இராசநாயகம் மாவட்ட ரீதியில் முதலிடத்தினைப் பெற்றுள்ளார்.

பௌதீகவியல் 5 பேர்

கலைப்பிரிவு : 16 பேர்

**மட்/ இந்துக்கல்லூரி**

பொறியியற்பிரிவு: B-2C

வணிக முகாமைத்துவம்: A-2B

கலைப்பிரிவு : மூவர்

சிறந்த பெறுபேறு 2B-C

## தமிழர்களுக்கு...... 5ம் பக்க தொடர்ச்சி

### சாணக்கியமான மூடிமறைப்பு

சந்திரிகா அளித்துள்ள விளக்கத்தில் தமிழருக்கு எதிரான சிங்கள பௌத்த இனவாதத்தின் கொடூர ஒடுக்குமுறை வரலாறு மிகவும் சாணக்கியமான முறையில் மூடிமறைக்கப்படுகின்றது. அத்தோடு இந்த இன ஒடுக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் பெற்றோரது பங்கும் இருட்டடிப்பு செய்யப்படுகின்றது.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு அரசியல் அமைப்பை குறைகாண்பது

**இந்த அரசியல் அமைப்பை**

அந்திய காலனித்துவத்தோடு தொடர்புபடுத்துவதும். முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயலும் கேலிக்கூத்தான விடயம் அந்நிய காலனித்துவ தலையீடு காரணமாக தமிழீழ மக்கள் தமது வரலாற்றுத் தாயகமான இறையாண்மையை இழந்தார்கள் என்பது வரலாற்று உண்மை ஆனால் தமிழர் மீதான திட்டமிட்ட ஒடுக்குமுறையானது. இலங்கைத் தீவு ஆங்கில காலனித்துவத்தில் இருந்து சுதந்திரம் அடைந்த பின்னரே ஆரம்பமானது. இந்த ஒடுக்கு முறைக்கு காரணகர்த்தாவாக விளங்குவது சிங்கள பௌத்த இனவாதமாகும். வேர்பாய்ச்சி மதத்தின் பெரரசிய சிங்கள சமூகக்கூட்டமைப்பின் விருட்சமாக வளர்ந்து நிற்கும் பேரினவாதச் சித்தாந்தம். சிங்கள அரசியல் உலகையும் ஆழமாக ஊடுருவி நிற்கின்றது. சிங்கள அரசியல் வாதிகளினால் அமைக் கப்பட்ட அரசியலமைப்பு சட்டங்களும் இந்தப் பேரினவாத சித்தாந்தத்தின ஓர்வடிவம் ஆகவே தமிழருக்கு கொடுமை இழைத்து வருவது சிங்கள பௌத்த இனவாதமே தவிர சந்திரிகா கூறுவது போல ஆங்கில காலனித்து கருத்துருவமில்லை. சிங்கள இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழர்கள் நிகழ்த்திய அரசியல் போராட்டங்கள் அமைதி வழியிலிருந்தது. ஆயுதப் போராட்டமாக விரிவுபெற்று இறுதியில் முழு அளவிலான போர்வடிவம் பெற்றிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர் படையினரான விடுதலைப்புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் போர் நிகழ்ந்துவருகின்றது.

**தமிழீழப்போர் மனித உரிமைச் சட்டங்களுக்கு இயைவானது**

தன்னாட்சி உரிமை உடையமக்கள் சமூகம் என்ற ரீதியில் இனஅழிப்பை நோக்காகக்கொண்ட அரச அடக்குமுறை யிலிருந்து. விடுதலை பெற ஆயுதமே ந்திப்போராடும் உரிமை எமக்கு உண்டு சர்வதேச மனித உரிமைச் சட்டங் களுக்கு இயைவான இந்தவுரிமையின் அடிப்படையில் தான் தமிழீழப் போர் நடைபெற்று வருகின்றது. இதுதான் உண்மை நிலை சிங்கள் அரசு இந்த போர் பற்றிய உண்மை நிலையையும் வரலாற்றுப் பின்னணியையும் உலகிற்கு இருட்டடிப்புச் செய்துவருகின்றது. அதுமட்டு மன்றி தமிழரின் தேச விடுதலைப் போரை பயங்கரவாதமென திரிவு படுத்தி இழிவுபடுத்தியும் வருகின்றது. தனது கொள்கைப் பிரகடன அறிக்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் மத்தியிலான போர்பற்றி சந்திரிகா குறிப்பிடும் போது இனப்பிரச்சினையின் ஒரு விளைவுதான் இந்தப்போா என்கின்றார். ஆயினும் அதே அறிக்கையில் இப்போரை ஆயுதப்பய ங்கரவாதம் என்று குறிப்பிடுகின்றார். தமிழிழப் போரை இனப்பிரச்சி னையின் வெளிப்பாடு என்று கூறும் அதே நாக்குத்தான் அதனை தமிழ ரின் ஆயுத பயங்கரவாதம் என்று விபரிக்கிஎ்றது. இனப்பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்துவைப்போம் என்று கூறும் சந்திரிகா பயங்கர வாதத்தை போர் மூலம் ஒழிப்போம் என முழங்குகின்றார். இப்படியான சந்திரிகா அரசு தமிழரின் போரின் உண்மை நிலையை திரித்து பயங்கரவாதம் எனக்குறிப்பிட்டு சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்றிவருகின்றது.

**இது விடுதலைப் போர்**

தமிழீழப் போரானது ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் விடுலைப் போர் என்ற யதார்த்த உண்மையை சிங்கள அதிகார வர்க்கம் ஏற்றுக்கொள் ள மறுக்கின்றது. இந்த மறுதலிப்புத்தான் தமிழரின் இனப்பிரச்சினையை சிக்கலாக்கி வருகின்றது. இதுதான் போரை விரிவுபடுத்தி வருவதற்கும் காரணமாக இருக்கின்றது. இதுதான் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு பெரும்முட்டுக்கட்டையாகவும் அமைகின்றது. சமர்தான வழியில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கின்றது. என பிரபாகரன் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் மாவீரர் நாள் வைபவங்கள் இடம்பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் துயிலும் இல்லங்களான தரவை, தாண்டியடி, மாவடிமுன்மாரி, வாகரை, ஆண்டாள்குளம் ஆகிய துயிலும் இல்லங்களிலும் கரடியனாறு நினைவுதூபி அரங்கிலும் ஈகைச் சுடர் ஏற்றும் நிகழ்வு நேற்று மாலை இடம்பெற்றது.

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தளபதி நாகேஸ் முதலாவது ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மாவீரர்களின் கல்லறைகளின் பின் ஏற்றினர்.

தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லம் முதலாவது ஈகைச்சுடரை மட்/அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றி வைத்தனர்.

மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் த.வி.பு.மூத்த உறுப்பினர் றொசான் முதலாவது ஈகைச்சுடர் ஏற்றி வைக்க ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றினர்.

வாகரை ஆண்டாள் குளத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் துணைத்தளபதி ஜீவன் முதலாவது ஈகைச்சுடரையும் ஏனைய சுடர்களை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றி வைத்தனா. வாகரையிலுள்ள மற்றுமொரு மாவீரர் துயிலும் இல்லத்தில் படையணியைச் சேர்ந்த ஜேம்ஸ் முதலாவது ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார்.

கரடியனாறு நினைவுத் தூபி அரங்கில் வெளியிட்டு பாரியப் பொறுப்பாளர் விமல்ராஜ் தலைமையில் ஈகைச்சுடர்கள் ஏற்றப் பட்டனர். இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் உள்ள உடும்பன் குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் படையணிப் பொறுப்பாளர் ஸ்டான்லியின் தலைமையில் ஈகைச் சுடர்கள் ஏற்றப்பட்டன. தரவையில் சுமார் பதினையாயிரத்திற்கு மேற்பட்ட பொது மக்களும் தாண்டியடியில் ஐயாயிரத்திற்கு அதிகமான வர்களும் மாவடி முன்மாரியில் இரண்டாயிரம் பொதுமக்களும் வாகரைப் பகுதியில் ஏழாயிரம் பொதுமக்களும், இந்நிகழ்வில் கலந்து கொண்டதாக அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

## பெண்களை வன்முறைக்குட்படுத்தாத சமூதாயத்துக்காக ~ பெண்கள் நிகழ்வு

(அரியம்)

மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத் தின் அனுசரணையுடன் கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங் களின் கூட்டமைப்பு நடாத்தும் "பெண்களை வன்முறைக்குட் படுத்தாத சமூதாயத்திற்காக" நிகழ்வு எதிர்வரும் நவம்பர் 30ம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு காந்தி சதுக்கத் திலும், மாலை 2.00 மணிக்கு அரசடி சந்தியிலுமாக இரண்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளின் போது வன்முறைக்குட்படுத்தப்பட்ட பெண்களை நினைவு கூர்ந்து சூரியா பெண்கள் அமைப்பின் கலாசாரக் குழுவினரின் வீதி நாடகமும் இடம் பெறும்

வன்முறையின் சாட்சிகளாக உடைகளின் மாதிரிகள் இந்நிகழ்வில் பிரதான நிகழ்வாக இடம் பெறவுள்ளது.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.